அ.வ.எண்:12 /2025 நாள்: 19.01.2026
வா.சா.1 – காளிமுத்து

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டாவை ரத்து செய்ததால் மீண்டும் பட்டா வழங்கக் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் சேவுகன் செட்டியார் என்பவர் பெயரில் இருந்தது. தாவா சொத்து மேற்படி சேவுகன் செட்டியார் என்பவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஒப்படைப்பு பட்டா மூலம் தாவா சொத்தை பெற்றார். தாவா சொத்தை மேற்படி சேவுகன் செட்டியார் என்பவர் நிறைவேற்றுதல் மனுவின் மூலம் ஏலம் எடுத்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஏலம் எடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்தால் தாவா சொத்து அதில் உள்ளதா, இல்லையா என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் தற்பொழுது வரை

பார்த்ததில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்து தற்பொழுது வருவாய் துறை ஆவணங்களில் அரசு கைப்பற்றுதல் இடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.12/14 என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் சுமார் 28 சென்ட் ஆகும். ஆதியில் தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து என் தகப்பனாருக்கு கிரைய சொத்து என்றால் சரிதான், எந்த ஆண்டு என் தகப்பனார் கிரயம் பெற்றார் என்றால் 1980 ஆம் ஆண்டு கிரயம் பெற்றார். மேற்படி கிரயம் பதிவு கிரயமா என்றால் இல்லை, பதிவு செய்யப்படாத கிரயமாகும். தாவா சொத்திற்கு பட்டா வழங்கும் படி நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எந்த ஆண்டு கொடுத்தேன் என்றால் 2013 ஆம் ஆண்டிற்கு பிறகு கொடுத்தேன், தேதி மாதம் நினைவில் இல்லை. மேற்படி மனுவில் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தாரா என்றால் பிறப்பித்தார். என்ன உத்தரவு பிறப்பித்தார் என்றால் தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் பரப்பளவை கணினியில் பதிவு செய்யும்படி உத்தரவு பிறப்பித்தார்.

3. மேற்படி வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை நான் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. மேற்படி வட்டாட்சியர் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்தேனா என்றால் மேற்படி நீதிப்பேராணை மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் மீண்டும் வட்டாட்சியர் அணுகி வருவாய் துறையின் மூலம் முறையான விசாரணைக்கு பிறகு பட்டா பெற்றுக்கொள்ளும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி உத்தரவிற்கு பிறகு வட்டாட்சியர் இரு தரப்பு விசாரணை செய்து அரசு கைப்பற்றுதல் நிலமாக இருப்பதால் பட்டா வழங்க இயலாது என்று உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

4. தாவா சொத்தானது வருவாய்துறை ஆவணங்களில் அரசு கைப்பற்றுதல் செய்யப்பட்டு அனாதீனமாக இருப்பதால் பட்டா வழங்க இயலாது என்று வருவாய் துறையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று

தாவா வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். ஒரு சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்காமல் பட்டா வழங்கும்படி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரி அல்ல. பட்டா பாஸ்புக் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றம் ஒரு சொத்து சம்பந்தமாக விளம்புகை தான் செய்ய முடியுமே தவிர பட்டா வழங்கும் படி வருவாய் துறையினருக்கு செயலறுத்துக் கட்டளை வழங்க இயலாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து சம்பந்தமாக விளம்புகை பரிகாரம் கேட்காமல் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தற்பொழுது வரை அரசு புஞ்சை கைப்பற்றுதல் இல்லாத இடமாக இருப்பதால் அது குறித்து எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.01.19 16:07:32 +0530